**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.194/2004**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 28.07.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : இளையப்பன் Father's Name : ராமசாமி

துவக்க நேரம்: 04.45 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**9, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். என்ன வேலை பார்த்தேன் என்றால் அரசு போக்குவரத்து கழகத்தில் மெக்கானிக்காக பணியில் சேர்ந்து போர்மேனாக பணி ஓய்வு பெற்றேன். தாவா 1-வது அயிட்ட சொத்து எனது அனுமானத்தின் பேரில் எழுதப்பட்டது என்றாலும், அப்படியொரு சொத்தே இல்லை என்றாலும் சரியல்ல.

2. தாவா 1-வது அயிட்ட சொத்து குறித்து இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாத்தா இளையப்ப கவுண்டரின் வாரிசு என்ற அடிப்படையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா இளையப்ப கவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என்ற விவரமும், எந்த தேதியில் எனது தந்தைக்கு உரிமை வந்தது என்ற விவரமும், எந்த தேதியில்

இருந்து உரிமை மூலமும், வழக்கு மூலமும் ஏற்பட்டது என்ற விவரமும் எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் எனது தாத்தா இளையப்ப கவுண்டர் இறந்தபொழுது நான் பிறக்கவே இல்லை. கடந்த 1950-ஆம் ஆண்டு பாகதாரர் என்ற முறையில் எனது அப்பாவிற்கு தாவா சொத்து பாத்தியமானது.

3. தாவா 2 வது அயிட்ட சொத்து குறித்து 1 முதல் 7 வரையான பிரதிவாதிகளிடம் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு 5 வருட காலமாக பாகப்பிரிவினை வேண்டி கேட்டு வருவதாக எனது தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை, தாவா தாக்கல் செய்வதற்கு 1 வருடத்திற்கு முன்புதான் பிரதிவாதிகளிடம் எனது சொத்தை பிரித்துக் கொடுக்குமாறு கேட்டு வந்தேன்.

4. தாவாவில் பத்தி எண்.7-ல் பிரதிவாதிகளிடம் தாவாவிற்கு முன்பு 5 வருடங்களாக எனது பாகத்தை கேட்டு வருவதாக குறிப்பிட்டுவிட்டு தற்பொழுது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் இந்த தாவாவை கடந்த 1994-ல்தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் இந்த தாவாவை தாக்கல் செய்தபொழுது எனக்கு என்ன வயது என்றால் 32 வயதிருக்கும்.

5. தாவா தாக்கல் செய்யும் பொழுது தாவா சொத்துக்களின் பட்டா, வில்லங்கச்சான்று ஆகியவற்றை பார்த்துவிட்டுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்குண்டான UDR பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்கள் எனது குடும்பத்தினர் பெயரில்தான் இருந்தது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வில்லங்கச்சான்று தாக்கல் செய்தால் 1-ஆம் பிரதிவாதி கைலாப்ப கவுண்டருக்கு தாவா சொத்துக்களை கடந்த 1962-ல் விற்பனை செய்த உண்மை தெரிய வரும் என்பதால்தான் மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா சொத்துக்களை விற்ற விவரமே எங்களுக்கு தெரியாது. நான் சொல்வது பொய்

என்றாலும், மேற்படி உண்மை தெரிந்தும் நான் இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. கடந்த 1950-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றாலும், மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் எனது தாத்தா இளையப்ப கவுண்டர் தனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட ஏ அட்டவணை சொத்தை (தாவா 2-ஆம் அயிட்ட சொத்து) வேறு யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, மேற்படி ஆவணத்தில் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை சொந்தமாகவோ, குத்தகைக்கோ விட்டு அதனால் கிடைக்கும் வருமானத்தில்தான் ஜீவ திசை வரையிலும் செய்து கொள்ளவேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மேற்படி ஆவணத்தில் **"இனி ஒருவருக்கொருவர் சிநேகித சம்மந்தமே தவிர அக்தாச சம்மந்தம் இல்லையென"** எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு எழுதுவது நடை முறை வழக்கம். வா.சா.ஆ.1-ல் ஏ அட்டவணை சொத்துக்கள் இளையப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஒருவருக்கு பிரிந்த பாகத்தில் மற்றொருவர் போக கூடாது என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது தாத்தாவிற்கும் 1-ஆம் பிரதிவாதியான எனது பெரியப்பாவிற்கும் சண்டை ஏற்பட்ட காரணத்தினால் அவ்வாறு எழுதப்பட்டது.

8. வா.சா.ஆ.1-ல் எனது தாத்தா இளையப்ப கவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பாராதீனம் செய்யக்கூடாது என்றோ, அவரத இறப்பிற்கு பின்னிட்டு எனது தந்தைக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் சேர வேண்டியது என்று எவ்வித வாசகமும் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல, மேற்படி பத்திரத்தில்

**"2, 3 இலக்கமிட்ட நபர்களுக்கு 1-ஆம் இலக்கமிட்ட நபர் தாய், தந்தை எனும்படியால் என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது"**

9. இந்த தாவாவில் 1-ஆம் வாதி எனது தாயார் என்றால் சரிதான். 1-ஆம் வாதியான எனது தாயார் தாவா 2-ஆம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை 1, 2, 4 பிரதிவாதிகளிடமிருந்து கடந்த 10.06.1982-ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணமான வா.சா.ஆ.2-ன் மூலமாக கிரயமாக பெற்றுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அந்த பாகம் கிணறு பாகம், அதைதான் எனது தாயாருக்கு விற்றுவிட்டார்கள்.

10. வா.சா.ஆ.2-ல் சொத்தானது 1-ஆம் நபரான 1-ஆம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாகவும், 2, 4 பிரதிவாதிகளுக்கு பிதுராஜ்யமாகவும் பாத்தியப்பட்டதென கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பொதுவாக அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. பாகம் பிரியாத சொத்தில் எனது தாயார் கிரயம் வாங்கி விட்டார் என்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அது கிணறு பாகம் என்பதால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

11. மேற்படி எனது தாயார் கிரயம் வாங்கிய சொத்தை எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அதே தேதியில் நானும், எனது சகோதரரும் வா.சா.ஆ.4-ஆன பாகப்பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4-ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் இனி நமக்குள் பிரிவினை செய்து கொள்ள வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லையென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களை எனது பாகத்திற்கு ஒதுக்கிவிட்டார்கள்.

12. வா.சா.ஆ.4 ஆனது கடந்த 05.05.2003-ஆம் தேதியன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் வாசகங்களின்படி எங்கள் குடும்பத்திற்கு பாகம் பிரிக்கப்படாத சொத்துக்கள் இல்லை என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும்

என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டுதான் பாகப்பிரிவினை பத்திரம் எழுதினோம், ஆனால் வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களை பற்றி மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை.

13. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண். 200/2004 என்ற வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தாவாவில் இந்த தாவாவின் 2-வது அயிட்ட சொத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.47 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.194/2004 , Dt.28.07.2025